1994 ஏப்ரல் 18]

288–

சென்னை நகரை விரிவுபடுத்த ஐக்கிய நாடுகள் சபை நிதி உதவி வழங்குதல்.

***15471–திரு. ஆர். சிங்காரம்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப் புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) சென்னை நகரை விரிவுபடுத்த ஐக்கிய நாடுகள் சபை நிதி உதவி செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எனவே, இக்கேள்வி எழவில்லை.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று சென்னையிலே ஜன நெருக்கம் அதிகமாக இருக்கின்றபடியால் சென்னையை ஒட்டியுள்ள ஏதாவது ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கே ஒரு புதிய நகரத்தை உருவாக்க இந்த அரசு முயற்சிக்குமா? அதற்காக உலக வங்கி மூலமாக கடன் பெற்று அந்த நகரை உருவாக்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வினா, சென்னை நகரை விரிவுபடுத்த ஐக்கிய நாடுகள் சபையினுடைய நிதி உதவி ஏதாவது இருக்கிறதா என்பது பற்றி சென்னை நகரை விரிவுபடுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபை எந்தவித நிதியுதவியும் செய்யவில்லை என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சென்னை நகரத்திலே இருக்கிற மக்கள் தொகையினுடைய நெருக்கத்தை கணக்கிலே எடுத்துக் கொண்டு, பக்கத்திலே ஏதாவது புதியதாக மாதிரி நகரங்கள் உருவாக்கப்படுமா என்ற வினாவினை எழுப்பி இருக்கிறார்கள். இன்றைக்கு ஐக்கிய நாடுகள் சபையிலேயே மனித குடியேற்று மையத்தினுடைய முயற்சியான, சுயமாக செயலாகும் நகரத் திட்டத்திலே சென்னை நகரம் தெற்கு ஆசியாவிலே ஒரே ஒரு நகரமாக சேர்க்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தில் யூ.என்.டி.பி.

நிதியுதவி பெற, இதற்குண்டான செயல் திட்டம் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம், இத்திட்டத்திற்காக சுமார் 6 இலட்சம் அமெரிக்க டாலர் நிதியுதவி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, மேலும் சென்னை நகரத்திலே குடியிருக்கிற மக்களுடைய வீட்டு வசதியைப் பெருக்குவதற்காகவும், தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டிக்காகவும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு மாதிரி நகரம் ஏற்படுத்த உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே மாதவரம் பகுதி அல்லது முகப்பேர் பகுதி அல்லது நொளம்பூர் பகுதியிலே ஒரு முன்மாதிரி கிராமத்தை மேலும் விரிவுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, வினா எண் 281, தற்பொழுது எடுத்துக் கொள்ளப்படுகிறது. திரு. பி.வி. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 289, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

289–

திருப்பத்தூர் தொகுதியில் தீப்பெட்டித் தொழிற்சாலை அமைத்தல்.

***23653–திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

திருப்பத்தூர் தொகுதியில் தீப்பெட்டித் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தீப்பெட்டித் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. எந்தவிதத் தொழில் வளமும் இல்லாத தொகுதி. மக்கள், விவசாயத்தையும் பீடித் தொழிலையும் நம்பி வாழ்கின்ற தொகுதி.